# மனையியற் கல்வியின் தத்துவம்..

டாக்டர். இராஜம்மாள் -
பா. தேவதாஸ் -
எம்.ஏ.எம்.எஸ்.சி.பி.எச்.டி

பாருக்கெல்லாம் திலகமாக விளங்கும் நமது பாரதம் பழமையும், பெருமையும் நிறைந்த நாகரிகம் வாய்ந்தது. கணம், கணம் தோன்றும் மாற்றங்களுக்கு, காலத்தில் சுழற்சி வேகத்தில் ஏற்படும் புதுமைகளுக்கு உலகம் வரவேற்புக் கொடுப்பது போல, நமது பாரதமும் பல்வேறு வகையான மாற்றங்களை ஏற்க வேண்டியிருக்கிறது; சமாளிக்க வேண்டியிருக்கிறது. கடந்த பல நூற்றாண்டுகளில் மனிதன் விண்ணையும், மண்ணையும் கட்டியாளும் அளவுக்குப் பல துறைகளிலும் முன்னேறியுள்ளான். அறிவியலும், தொழிலியலும் வளர்ந்து, செல்வம், செல்வத்தால் வரும் இன்பம், ஒய்வு இவற்றையெல்லாம் மனிதன் அனுபவிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறான். வேளாண்மைத் தொழிலும், இயந்திரத் துறையும் முன்னேற்றமடைந்து பல வகையிலும் வளத்தைப் பெருக்கி மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது உண்மையே. வெளி உலகத்தில் மனிதன் எவ்வளவுதான் கடுமையாக உழைத்தாலும், முன்னேறினாலும், அவனுக்கு நீடித்த மகிழ்வையும், மன நிறைவையும் தருவது இல்லமே - இல்வாழ்க்கையே என்பதில் இரண்டு விதக் கருத்துக்கள் இருக்க முடியாது. மனைத்தக்க மாண்புடையளாக விளங்கும் வாழ்க்கைத் துணை, தன் கணவனின் உள்ளத்தில் நம்பிக்கையை வளரச் செய்து, தன் மழலைச் செல்வங்களின் உள்ளத்தில் வலிமையை ஊன்றச் செய்து, தானும், தன் குடும்பமும் மன நிறைவைக் காணுதலையே கடமையாகக் கொண்டு வீட்டையும், நாட்டையும் உயர்த்துகின்றாள்.

''இல்லம்'', ''குடும்பம்'' என்பவற்றின் தத்துவம்தான் மனையியல் கல்வியின் தத்துவமாகும். ''வீடு'' என்ற தத்துவம்தான் மனிதனுக்குக் குடும்பத்தை அமைக்கக் கற்றுக் கொடுக்கிறது. அன்பு, அருள், பக்தி, தியாகம், ஒழுக்கம், ஆண்மை, தேச பக்தி, பெருந்தன்மை ஆகிய சிறந்த பண்புகளை வழங்குவது மனையே ஆகும். இல்லத்தில் துவங்கும் அன்பானது, அருளாக மாறி, சமூகத்தின் மீது, நாட்டின் மீது, மனித இனத்தின் மீதே பரிவாக மாறுகிறது. இத்தத்துவமே, மனித இனத்தின் மீது இரக்கமாக மாறுகிறது. இத் தத்துவமே, மனிதனின் உயர்ந்த கருத்துக்களுக்கும், செயல்

களுக்கும் வித்திடுகிறது; எதிர் காலத்தை யும் வரையறுக்கிறது.

அன்பும், அருளும் நிறைந்த இல்லமானது, இவ்வுலகிலேயே காணப்படும் ''வானகம்'' என்று சொல்லலாம். 'அமரர் சங்கம்' எனக் கூறலாம். இதனைக் கருத்தில் கொண்டுதான் அமர கவி பாரதியும், மண் பயனுற்றால் வானகம் இங்கு தென்படலாம் எனக் கூறினர் போலும். பல மொழிகளில் ''இல்லம்'' என்ற சொல் ''குடும்பம்'' என்ற பொருளில் வழங்கப்பட்டு வருகிறது. ''இல்லம், மனை அல்லது வீடு'' என்ற உலகத்தில்தான் குழந்தை மனிதனாக வளருகிறது; நல்ல பண்புகளையோ, வேண்டா தவற்றையோ அது கற்றுக் கொள்கிறது. மக்களுடன் கலந்து உறவாட, மரியாதையுடன் பழகிக் குடும்பத்தைப் பாதுகாக்க, சமூகத்திற்குத் தன் கடமைகளைச் செய்யப் பழகிக் கொள்கிறது. ஒரு சமூகத்தில் பண்பாடுகளை வெளிப்படுத்துவதும் அதிலுள்ள இல்லங்களே.

ஆன்மீக நெறிகளின் அடிப்படையில் அமைந்தது இந்திய மனை வாழ்க்கை. உயர்ந்த பண்பாடும், பக்தியும், தியாகமும் நிறையுமாறு இல்லத்தை நடத்துவது இந்தத் தத்துவத்தின் அடிப்படைக் கருத்தாகும். மானிட வாழ்க்கையில் நான்கு படிகள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் ''கிரகஸ்த ஆசிரமம்'' எனப்படுவது. அதுவே, மனை வாழ்க்கையில் அடிப்படையாக விளங்கி வருகிறது.

பொதுவாக, மனை என்ற சொல் மனைக்குரிய மனையாளையும் குறிப்பிடுவதாகும். மனையாள், இல்லாள், மனைக்குரியவள் இல்லத்திற்குரியவள், என்ற சொற்களே இவ்வுண்மையை விளக்கும். இந்திய நாட்டில் பெண்மை உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்பட்டு வந்துள்ளது. இறைவனின் சக்தியையும் பெண்மை வடிவில் கண்டு வழிபடுகின்றோம். சிவனுக்கு ஆற்றலளிக்கும் பெண்மையும் சக்திதான். தன் குழந்தைகளை உருவாக்குவதில் தாய் தன் உயிரையே பணயம் வைக்கிறாள். பெற்றெடுத்து, தாலாட்டிப் பாராட்டிச் சீராட்டிக் காத்து, குற்றம் காணுமிடத்தில் வெறுக்காது அன்பு செலுத்தி வளர்க்கும் தாய்மைதான் தியாகத்தின் சின்னமென்று கூறலாம். அதுதான் இறைவனின் பெண்மை வடிவாக வணங்கப்படுகிறது.



மனித வாழ்க்கையை உருவாக்குவதில் பெண்களுக்குரிய பெரும் பொறுப்பினைப் பற்றிப், பழங்காலத்திலிருந்தே நீதி நூல்களனைத்தும் கூறியுள்ளன.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தமிழில் இயற்றப் பெற்ற சிறந்த நீதி நூல் திருக்குறளாகும். இந் நூல் கோடிக் கணக்கான மக்களுக்குப் பல காலமாக உணர்வும், ஆண்மையும் ஊட்டி வந்துள்ளது. மனையாளைப் பற்றிச் சிறப்பாகக் கூறியுள்ளது.

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை
மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்,
மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்
சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.
புகழ் புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

வாத்ஸ்யாயனர் சிறந்ததொரு பெண்ணின் வாழ்க்கை முறையைப் பின்வருமாறு கண்டார்.

''தன் கணவன் மீது அன்பு கொண்டுள்ள பெண் அவனைத் தெய்வமாகக் கருதி அவனது விருப்பத்திற்கேற்ப நடப்பாள். தன் இல்லத்தைத் தூய்மையாக வைப்பதுடன் ஒவ்வொரு அறையிலும் மலர்களை வைத்து அலங்கரிப்பாள். வீட்டைச் சுற்றிலும் தோட்டங்கள் அமைப்பாள். தரையை வழ வழப்பாகவும், பளபளப்பாகவும் வைத்திருப்பாள். எல்லாவற்றிற்கும் மேலாக, அவள் குடும்பத் தெய்வங்களைத் தவறாது வழிபடுவாள். கணவனின் பெற்றோரிடத்திலும் பக்தியுடன் நடந்து கொள்ளுவாள். அவர்களிடம் மெதுவாகவும், பணிவாகவும் பேசுவாள். அவர்களை மறுத்துரைக்காது, அமைதியாகவும், மரியாதையுடனும் நடந்து கொள்ளுவாள். தன் மனம் போன போக்கில் நடக்கமாட்டாள். தன் கணவன் விரும்பும் உணவு எது, வெறுப்பது எது என்றறிந்து அதற்கேற்பச் சமைத்துப் பரிமாறி அவனுக்கு மகிழ்வூட்ட முயல்வாள். கணவன் தவறு இழைக்கும் பொழுது, அன்பும், ஆதரவுமுள்ள கனிந்த மொழிகளால் திருத்துவாளேயன்றி வெகுண்டு சீறுவதில்லை.

மநுநீதியில் கூறியிருப்பதையும் நோக்குவோம்: ''எந்த நாட்டின் பெண்கள்



மதிக்கப்படுகின்றார்களோ, எந்த நாட்டில் பெண்கள் கல்வியறிவு உடையவர்களாக இருக்கின்றார்களோ — அந்த நாடு வளம் பெறும்.''

''குடும்பத் தலைவி எப்பொழுதும் மகிழ்வுடன் இருக்க வேண்டும். குடும்பக் கடமைகளைச் சரிவரச் செய்யும் திறன் உடையவளாகவும், வீட்டுப் பொருட்களையும், அணிகளையும் தாய்மையுடன் வைத்திருப்பவளாகவும், செலவில் சிக்கனமாக இருப்பவளாகவும், இருத்தல் வேண்டும்.''

''நல்ல மனைவி, குடும்பத்தில் எல்லா நற்பண்புகளையும் உண்டாக்குவாள்.''

சுவாமி விவேகாநந்தர் பின்வருமாறு கூறியுள்ளார்:

''பெண்களிடத்திலும், பாமர மக்களிடத்திலும் கல்வி பரவாவிடில் நாட்டின் நிலைமை முன்னேற முடியாது.''

''சமயம், விஞ்ஞானம், கலைகள், மனை நடத்துதல், சமையல், தையல், சுகாதாரம் போன்றவை நம்முடைய பெண்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு வரலாறும், புராணங்களும் குடும்ப வாழ்வின் கடமைகளும், உயர்ந்த பண்புகளை வளர்க்கும் கருத்துக்களும், இக்கால விஞ்ஞான உதவியைக் கொண்டு கற்பிக்கப்பட வேண்டும்.''

''மாணவர்களுக்கு ஒழுங்கான, தூய, சிறந்த வாழ்க்கை வாழப் பயிற்சி அளிக்க வேண்டும்.''

''கல்வியும், பக்தியும் நிறைந்த தாய்மார்களின் இல்லங்களிலேதான் உலகத் தலைவர்கள் பிறக்கிறார்கள்.''

இனி, காந்தியடிகள் கூறியுள்ள கருத்துக்களை நோக்குவோம்:

''பெண்களுக்குத் தகுந்த கல்வி அளிப்பதில் நம்பிக்கையுடையவன் நான். இந்தியாவின் எதிர்காலம் பெண்களின் கையில் இருக்கின்றது. உள்ளத்தை மீட்டும் ஆற்றல் பெண்களைத் தவிர வேறு யாருக்கு உள்ளது?''

''அகிம்சையின் அவதாரம் பெண். அகிம்சை என்பது அழியாத, முடிவில்லாத அன்பும், எல்லையில்லாத சகிப்புத் தன்மையும் ஆகும். தாயாகிய பெண்களைத் தவிர வேறு யார்தான் இந்த மகத்தான சகிப்புத் தன்மையைக் காட்ட முடியும்? பெண், தன்னுடைய இந்தப் பெரிய அன்பைச் சமுதாயத்திடம் காட்டுவாளேயாகில், மனிதனின் தாயாக, படைப்பாளியாக, அமைதியாக வழி நடத்திச் செல்லும் தலைவியாகப் பெருமையுடன் இடம் பெறுவாள்.''

பரிசுத்த வேதாகம விவிலிய நூலில் குடும்பப் பெண்ணைப் பற்றிக் குறிப்பிடும் வசனங்களாவன:

''நல்ல பண்புகளையுடைய பெண்ணைக் கண்டு பிடிப்பவன் .யார்? அவனுடைய மதிப்பு மாணிக்கங்களைக் காட்டிலும் உயர்ந்தது.''

''அவளுடைய கணவன் அவளிடம் நம்பிக்கை வைக்கிறான். ஆதலின் அவன் எத்தகைய கவலையும் அடைவதில்லை. அவள் அவனுக்கு வாழ்நாள் முழுவதும் நன்மை செய்கிறாள்.''

''அவள் ஏற்றிவைக்கும் விளக்கு இரவு முழுவதும் அணைவதில்லை.''

''அவள் முழு மனத்தோடு தன் கைகளால் வேலை செய்கிறாள்.''

''நேர்மையும், சகிப்புத் தன்மையும் அவளுக்கு அணி செய்யும் ஆடைகள் போன்றவை.''

''அவள் வாயைத் திறந்தால் அறிவு வெளிப்படுகின்றது. அவளது நாவில் அன்பின் ஆணை உள்ளது''.

ஆகவே, தொன்று தொட்டே பெண் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டு வந்துள்ளது. ஆனால், அவர்களுக்குக் கல்வி புகட்டத் தனி நிறுவனங்கள் இருக்க வில்லை. இக்காலத்திலோ, பெண் கல்வியின் தேவை உணரப்பட்டது மட்டுமின்றி, அதற்காகப் பெருமளவில் கவனமும் செலுத்தப்பட்டு வருகிறது. பெண்களுக்கு எத்தகைய கல்வி எம்முறையில் அளிக்கப் படவேண்டும் என்ற வினவும் அடிக்கடி எழுகின்றது. இந்த வினவுக்கு விடை இன்று கண்டுவிட்டதன் விளைவுதான் மனையியல், கல்வியின் தத்துவம் விரிந்து வலுவடைந்து வருகிறதென்று சொல்ல வேண்டும்.

மதிக்கப்படுகின்றார்களோ, எந்த நாட்டில் பெண்கள் கல்வியறிவு உடையவர்களாக இருக்கின்றார்களோ — அந்த நாடு வளம் பெறும்.''

''குடும்பத் தலைவி எப்பொழுதும் மகிழ்வுடன் இருக்க வேண்டும். குடும்பக் கடமைகளைச் சரிவரச் செய்யும் திறன் உடையவளாகவும், வீட்டுப் பொருட்களை யும், அணிகளையும் தூய்மையுடன் வைத் திருப்பவளாகவும், செலவில் சிக்கனமாக இருப்பவளாகவும், இருத்தல் வேண்டும்.''

''நல்ல மனைவி, குடும்பத்தில் எல்லா நற்பண்புகளையும் உண்டாக்குவாள்.''

சுவாமி விவேகாநந்தர் பின்வருமாறு கூறியுள்ளார்:

''பெண்களிடத்திலும், பாமர மக்க ளிடத்திலும் கல்வி பரவாவிடில் நாட்டின் நிலைமை முன்னேற முடியாது.''

''சமயம், விஞ்ஞானம், கலைகள், மனை நடத்துதல், சமையல், தையல், சுகாதாரம் போன்றவை நம்முடைய பெண்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு வரலாறும், புராணங்களும் குடும்ப வாழ்வின் கடமைகளும், உயர்ந்த பண்புகளை வளர்க்கும் கருத்துக்களும், இக்கால விஞ்ஞான உதவியைக் கொண்டு கற்பிக்கப்பட வேண்டும்.''

''மாணவர்களுக்கு ஒழுங்கான, தூய, சிறந்த வாழ்க்கை வாழப் பயிற்சி அளிக்க வேண்டும்.''

''கல்வியும், பக்தியும் நிறைந்த தாய் மார்களின் இல்லங்களிலேதான் உலகத் தலைவர்கள் பிறக்கிறார்கள்.''

இனி, காந்தியடிகள் கூறியுள்ள கருத்துக்களை நோக்குவோம்:

''பெண்களுக்குத் தகுந்த கல்வி அளிப்பதில் நம்பிக்கையுடையவன் நான். இந்தியாவின் எதிர்காலம் பெண்களின் கையில் இருக்கின்றது. உள்ளத்தை மீட்டும் ஆற்றல் பெண்களைத் தவிர வேறு யாருக்கு உள்ளது?''

''அகிம்சையின் அவதாரம் பெண். அகிம்சை என்பது அழியாத, முடிவில்லாத அன்பும், எல்லையில்லாத சகிப்புத் தன்மை யும் ஆகும். தாயாகிய பெண்களைத் தவிர வேறு யார்தான் இந்த மகத்தான சகிப்புத் தன்மையைக் காட்ட முடியும்? பெண் தன்னுடைய இந்தப் பெரிய அன்பை சமுதாயத்திடம் காட்டுவாளேயாகில், மனி தனின் தாயாக, படைப்பாளியாக, அமைதி யாக வழி நடத்திச் செல்லும் தலைவியாக பெருமையுடன் இடம் பெறுவாள்.''

பரிசுத்த வேதாகம விவிலிய நூலில் குடும்பப் பெண்ணைப் பற்றிக் குறிப்பிடும் வசனங்களாவன:

''நல்ல பண்புகளையுடைய பெண்ணைக் கண்டு பிடிப்பவன் யார்? அவனுடைய மதிப்பு மாணிக்கங்களைக் காட்டிலும் உயர்ந்தது.''

''அவளுடைய கணவன் அவளிடம் நம்பிக்கை வைக்கிறான். ஆதலின் அவன் எத்தகைய கவலையும் அடைவதில்லை. அவள் அவனுக்கு வாழ்நாள் முழுவதும் நன்மை செய்கிறாள்.''

''அவள் ஏற்றிவைக்கும் விளக்கு இரவு முழுவதும் அணைவதில்லை.''

''அவள் முழு மனத்தோடு தன் கை ளால் வேலை செய்கிறாள்.''

''நேர்மையும், சகிப்புத் தன்மையும் அவளுக்கு அணி செய்யும் ஆடைகள் போன்றவை.''

''அவள் வாயைத் திறந்தால் அறி வெளிப்படுகின்றது. அவளது நாவில் அன்பின் ஆணை உள்ளது''.

ஆகவே, தொன்று தொட்டே பெண் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டு வந்துள்ளது. ஆனால், அவர்களுக்குக் கல்வி புகட்டத் தனி நிறுவனங்கள் இருக்க வில்லை. இக்காலத்திலோ, பெண் கல்வியின் தேவை உணரப்பட்டது மட்டுமின்றி, அதற்காகப் பெருமளவில் கவனமும் செலுத்தப்பட்டு வருகிறது. பெண்களுக்கு எத்தகைய கல்வி எம்முறையில் அளிக்கப் படவேண்டும் என்ற வினாவும் அடிக்கடி எழுகின்றது. இந்த வினாவுக்கு விடை இன்று கண்டுவிட்டதன் விளைவுதான் மனையியல், கல்வியின் தத்துவம் விரிந்து வலுவடைந்து வருகிறதென்று சொல்ல வேண்டும்.

# அதற்குப்பின்..?

ஜெகசிற்பியன்



என் வீடு இருண்டு கிடக்கிறது. நான் அவ்வீட்டிலிருந்து வெளியே இழுத்தெறியப் பட்டுவிட்டேன். என் வீட்டைச் சுற்றி இன்னும் பல வீடுகள் சிறிதும் பெரிதுமாய் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் எனக்குப் பழக்கமானவை. எனது வீட்டோடு தொடர்பு கொண்டவை. எனக்குப் பழக்கமில்லாத சில வீடுகளும் அங்கே இருக்கின்றன. அவற்றிலெல்லாம் விளக்குகள் எரிகின்றன. என் வீடு மட்டும் இருண்டு வெறிச்சோடிப் போய்க் கிடக்கின்றது.

நான் எங்கே போவேன்? எங்கே போவது?... திகைத்து நிற்கிறேன்.

''இன்னும் ஏன் நிற்கிறாய்? வேறு வீடு பார்த்துக் கொண்டு போ! இனி உனக்கு இந்த வீட்டில் இடமில்லை.''

என்னை என் வீட்டிலிருந்து இழுத்து வெளியே எறிந்தவன் இவ்வாறு கூவுகிறான்.

நான் சுற்றும்முற்றும் பார்க்கிறேன். பார்வைக்கு எட்டிய தூரம்வரை பல வீடுகள்—பலவிதமான வீடுகள்—தென்படுகின்றன. எல்லா வீடுகளிலும் விளக்குகள் எரிகின்றன. சில விளக்குகள் பிரகாசமாய்த் தெரிகின்றன. சில மங்கலாக மினுக்குகின்றன.

ஓ,...எல்லா வீடுகளிலும் விளக்குகள் எரிகின்றன என்று எப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல முடியும்? விளக்கு இல்லாத வீடுகளும்—என் வீட்டைப்போல்—அங்கே இருண்டு வெறிச்சோடிக் கிடக்கலாம். அவற்றில் குடியிருந்தவர்கள் என்னைப் போலவே இப்போது வெளியில் திகைத்து நின்று தவித்துக்கொண்டுமிருக்கலாம்.

''இன்னுமா நிற்கிறாய்? போ! வேறு வீடு பார்த்துக் கொள்ளப் புறப்படு!''

அவன் மீண்டும் என்னை விரட்டுகிறான்.

''என்னை ஏன் இந்த வீட்டிலிருந்து வெளியேற்றி விட்டாய்?''—ஆத்திரத்தோடு நான் கேட்கிறேன்.

''உனக்கு இதில் குடியிருக்கக் கொடுத்த காலத் தவணை தீர்ந்துவிட்டது.''

''இதை ஏன் என்னிடம் நீ முன்கூட்டியே அறிவிக்கவில்லை?''

''உன்னை இவ்வீட்டில் குடியேறவிட்ட போது நமக்குள் அந்த ஒப்பந்தம் கிடையாது. வீட்டைக் காலி செய்ய முன்னறிவிப்புத் தரவேண்டும் என்று நீயும் கேட்கவில்லை; நானும் கொடுக்கவில்லை.''

''அதனால் நீ நினைத்தபோது நான் இந்த வீட்டைக் காலி செய்துவிட வேண்டியதுதானா?''

''ஆமாம். ஒவ்வொரு நிமிடமும் நீ அதற்குத் தயாராயிருந்திருக்கவேண்டும். ஏனென்றால் முன்னறிவிப்புத் தரப்படமாட்டாது என்பது உனக்குத் தெரியும்.''

''இது அநியாயம்!'' என்று கத்துகிறேன் நான்.

''எந்த ஒரு நியாயத்துக்கு முன்னாலும் அகரத்தைச் சேர்த்துக்கொள்வது எளிது'' என்று சொல்லிவிட்டு அலட்சியமாகச் சிரிக்கிறான் அவன்.